# ஒன்பதாம் வகுப்பு -கணக்கு - புள்ளியியல் - ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு M.A.,M.Sc.,M.Phil.,B.Ed., B.T.Asst.,
Kamarajar Municipal High School,Melacauvery,Kumbakonam

## பயிற்சி 9.3

### பலவுள் தெரிவு வினாக்கள்

1. 0–க்கும் மற்றும் 1–க்கும் இடைப்பட்ட ஓர் எண்ணைக் கொண்டு உறுதியற்றவற்றை அளவிடுவது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) சமவாய்ப்பு மாறி (2) முயற்சி (3) எளிய நிகழ்ச்சி (4) நிகழ்தகவு

2. நிகழ்தகவு மதிப்பின் இடைவெளி
(1) $-1$ மற்றும் $+1$ (2) 0 மற்றும் 1 (3) 0 மற்றும் $n$ (4) 0 மற்றும் $\infty$

3. ஒப்பீட்டு நிகழ்வெண் கருத்தை அடிப்படையாகக்கொண்ட நிகழ்தகவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) பட்டறி நிகழ்தகவு (2) தொன்மை நிகழ்தகவு
(3) (1) மற்றும் (2) இரண்டும் (4) (1)வும் அல்ல (2) வும் அல்ல

4. ஒரு நிகழ்ச்சியின் நிகழ்தகவு எவ்வாறு இருக்க முடியாது?
(1) பூச்சியத்திற்குச் சமம் (2) பூச்சியத்தை விடப் பெரியது
(3) 1இக்குச் சமம் (4) பூச்சியத்தை விடச் சிறியது

5. ஒரு சமவாய்ப்புச் சோதனையில் வாய்ப்புள்ள அனைத்து விளைவுகளின் நிகழ்தகவு எப்பொழுதும்………….. இக்குச் சமம்
(1) ஒன்று (2) பூச்சியம் (3) முடிவிலி (4) ஒன்றை விடக் குறைவு

6. $A$ என்பது $S$–ன் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி மற்றும் $A'$ என்பது A–ன் நிரப்பு நிகழ்ச்சி எனில் $P(A')$ இன் மதிப்பு
(1) 1 (2) 0 (3) $1-A$ (4) $1-P(A)$

7. பின்வருவனவற்றுள் எது ஒரு நிகழ்ச்சியின் நிகழ்தகவாக இருக்க முடியாது?
(1) 0 (2) 0.5 (3) 1 (4) $-1$

8. ஒரு சோதனையின் குறிப்பிட்ட முடிவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) முயற்சி (2) எளிய நிகழ்ச்சி (3) கூட்டு நிகழ்ச்சி (4) விளைவு

9. ஒரு சோதனையின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விளைவுகளின் தொகுப்பு …………. என அழைக்கப்படுகிறது.
(1) நிகழ்ச்சி (2) விளைவு (3) கூறுபுள்ளி (4) மேற்கண்ட எதுவுமில்லை

10. ஒரு பகடையானது …….. இருக்கும்போது, அதன் ஆறு முகங்களும் சமவாய்ப்புடையவை என அழைக்கப்படுகிறது.
(1) சிறியதாக (2) சீரானதாக (3) ஆறு முகம் கொண்டதாக (4)வட்டமாக

LIVEWORKSHEETS